முருகப்பெருமான் துணை

**மகான் திருமாளிகைத்தேவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.07.2023, சனிக்கிழமை

1. தான தரும பலம் பெருக்கி
   தரணியில் தயவு நெறிபடவே
   ஞானம் வளர்க்கின்ற தேசிகனே
   ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசிதனை
   குறைவிலா சோபகிருது மிதுனதிங்கள்
   தெரிவிக்க முப்பான் திகதி காரிவாரம்
   **(சோபகிருது வருடம் ஆனி மாதம் 30 ம் நாள், 15.07.2023, சனிக்கிழமை)**
   தேசிகன்கேட்க திருமாளிகைத்தேவர் யானும்
3. யானும் உலகநலம் காண உரைப்பேன்
   உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
   ஞானமாம் உயர்நெறி தன்னை
   நம்பிக்கைபட மக்களுக்கு அருளி
4. அருளியே அற்புதம் நடத்துகின்ற
   அரங்கனின் வழிகாட்டலும்
   இருளெனும் மாயை போக்கி
   ஏகாந்தம் தரும் வழிவகை ஆகும்
5. ஆகவே அரங்கன் வாழுகின்ற
   ஆற்றல்மிக்க ஞானக்குடிலை
   வகைபட வணங்கி வந்து
   வரமாக அரங்கன் தருகின்ற
6. தருகின்ற தீட்சைதனை ஏற்று
   தவமாக பூசை முறைசெய்து
   தரும வழிவகைதனில் கலந்து
   தானும் கரம்பட சேவை செய்து

7. செய்துமே அறம் நிறைந்தவழி
சேவர்களாக அரங்கமகானின்
மெய்ஞானச் சீடர்களாகியே
மொழிகுவேன் தொடர்ந்து வருக
8. வருகவே சக்திபலம் கூடி
வையகம் வந்த நோக்கமுடன்
தருகின்ற தரும குணம் பெருகி
தன் கருமவினை வெல்லுகின்ற
9. வெல்லுகின்ற ஆற்றல் கூடிட
வேலவன் ஆசி பெற்றவர்களாக
வல்லமை கூடி வசதிபடவே
வாழும் காலம் தேவைகள் அனைத்தும்
10. அனைத்தும் பூர்த்திபட இனிதே
அறம்விட்டு அகலாத மாந்தர்களாக
துணைபட அரங்கன் தயவுடன்
தொண்டுவழி தேசம் மாற்றுகின்ற
11. மாற்றுகின்ற மன்னவர்களாகவே
மகான் வழி மகத்துவம் கூடி
ஆற்றல்பட உலகமாற்றம் புரிவர்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—